முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1120

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.10.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார ஞானியே அரங்கா வாழ்க
ஓங்கார குடில் படைத்த தேசிகா வாழ்க
ஓங்கார ஞானம் உலகோர்க்கு அருளுகின்ற
ஓங்காரன் என் அவதாரமே வாழ்க வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 06 ம் நாள் 23.10.2022 ஞாயிற்றுக்கிழமை)
தாழ்விலா அரங்கன் ஓங்காரசபை
தரணியவே மாற்றும் ஞான சபையாகும்
3. சபைதனில் உலகோர் சரணாகதி கொண்டு
சாற்றிடுவேன் சற்குருவே என அரங்கன் திருபாதம்
பற்றியே உலகோர் பணிந்து தொடர பாருலகில் ஞானவான்கள் என்கின்ற சக்தி கூடி
ஆற்றல்பட உலகை மாற்றும் அற்புதத்தை அன்பர்கள் அடையக்கூடும்
4. கூடவே இந்தவித பெருமாற்றத்தை
குருஅரங்கன் தன் அவதாரத்தில் நிகழ்த்திவர
வருகின்ற அரங்கனின் வள்ளல் தன்மை
வல்லமைபட பெருக பெருக
5. பெருகவே பேருலகம் மாற்றம் பெறும்
பிரபஞ்சமே ஞான சக்தி கூடி
வறுமை வெல்லும் நிலைகள் பெருகி
வையகம் சர்வ பாதுகாப்பும் பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–